
# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 07 வெள்ளிக்கிழமை 21.03.2025 | அதிர்வு 230


## காணி மோசடியுடன் ஷிரந்திக்குத் தொடர்பு

### விசாரணைக்குக் கோரிக்கை



04


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


## வவுனியா வடக்கில் நிராகரிக்கப்பட்ட சங்கின் வேட்புமனு இரண்டாவது ஊடக சந்திப்பில் சரி எனக் கூறப்பட்டது எப்படி?



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கட்சி கூட்டத்தில் நிராகரிக்கப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியின் வேட்புமனு, இரண்டாவது ஊடக சந்திப்பில் சரி எனக் கூறப்பட்டது எப்படி? என்று பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட வவுனியா வடக்கு பிரதேச சபைக்குத் தாக்கல் செய்திருந்த ஜன நாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணியின் (சங்கு) வேட்புமனு

03

### உள்ளகப் பொறிமுறையின் கீழ்

## தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டுங்கள்; யார் குற்றவாளி என்றாலும் தண்டியுங்கள்

### பேட்டியில் ரணில் தெரிவிப்பு நவநீதம்பிள்ளைக்குப் பாராட்டு



“நான் இலங்கையைச் சர்வ தேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதை எப்போதும் எதிர்த்து வந்துள்ளேன். எனினும், பாதிக் கப்பட்ட தமிழர்களுக்கு உள்ள கப் பொறிமுறையின் கீழ் நீதியை நிலைநாட்டுங்கள். யார் குற்றவாளி என்றாலும் தண்டியுங்கள்.

04

## வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் துன்புறுத்தப்படும் ஆசிரிய மாணவர்கள்

### பெற்றோர்களின் முறைப்பாட்டையடுத்து விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு



(கி.வசந்தன்)

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி தொடர்பில் விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

வவுனியா கல்வியற் கல்லூரி தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடு தொடர்பில் ஊடக வியலாளர் இன்று கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “வவுனியா கல்வியற் கல்லூரியில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்

03


மே 6ஆம் திகதி தீர்ப்பு

உள்ளூர் ஆட்சி யாரிடம்?

உங்கள் வாக்கு - உங்கள் உரிமை



# இலங்கை விமானப் படையின் பயிற்சி விமானம் ஒன்று விபத்து

## விசாரிக்க விசேட புலனாய்வுக் குழு நியமனம்



(க.மகாதேவன்)

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான கே 8 போர் பயிற்சி ஜெட் விமானம் ஒன்று இன்று காலை விபத்துக்குள்ளானது.

கட்டுநாயக்கவில் இருந்து புறப்பட்ட ஜெட் விமானம், ரேடார் தொடர்பை இழந்து, பின்னர் குருநாகல் - வாரிய பொல பகுதியில் விழுந்து நொறுங்கியுள்ளது.

விபத்து இடம்பெற்ற நேரத்தில் விமானத்தில் இரண்டு விமானிகள் இருந்தனர் எனவும், அவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர் எனவும் விமானப் படை தெரிவித்துள்ளது

இந்தப் பயிற்சி விமான விபத்து தொடர்பில், இலங்கை விமானப் படை அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் உள்ள இலங்கை விமானப் படையின் எண் 5 போர் படைக்கு நியமிக்கப்பட்ட விமானிகளின் மேம்பட்ட பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும் கே 8 விமானம், இன்று வெள்ளிக்கிழமை காலை குருநாகல் - வாரிய பொல பகுதியில் பயிற்சியின் போது விபத்துக்குள்ளானது.

விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளும் விமானத்தில் இருந்து பாதுகாப்பாக வெளியேறி, குருநாகலில் உள்ள பதேனியா மினுவன்கேட் கல்லூரி வளாகத்தில் பாராசூட்களின் உதவியுடன் தரையிறங்கினர்.

இந்த விமானத்தில் தலைமை பயிற்சி பயிற்றுவிப்பாளர் விமானி மற்றும் பயிற்சி விமானி அதிகாரி ஆகியோர் பயணித்துள்ளனர்.

மேலும் இந்த அதிகாரிகள் குருநாகல் தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விமானம் இன்று காலை 7.27 மணியளவில் கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் இருந்து புறப்பட்டு, காலை 7.55 மணியளவில் விபத்துக்குள்ளானது.

விபத்தைத் தொடர்ந்து, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க, விபத்து குறித்து விசாரணை நடத்த பல உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சிறப்பு புலனாய்வுக் குழுவை நியமித்தார்.” - என்றுள்ளது.



## தையிட்டியில் போராட்டக்காரர்கள் மீதான பொலிஸாரின் அராஜகம்:

# ஒன்றரை வருடங்களுக்குப் பின் விசாரணையை ஆரம்பித்த இலங்கை மனித உரிமை ஆணைக்குழு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பொலிஸாரினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் ஒன்றரை வருடங்களின் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றக் கோரி 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்டிருந்த ஜனநாயக ரீதியான போராட்டத்தின்போது பலாலி பொலிஸாரால் அராஜகமான அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டு சட்டவிரோத கைதுகள் இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் 8 பேரினால் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும், காரணம் எதுவுமின்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தால் குறித்த முறைப்பாட்டு கோவைகள் யாழ். பிராந்திய காரியாலயத்தில் இருந்து கையேற்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணை எதுவும் நடைபெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு காரியாலயத்தில் இன்று விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்படாதிருந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு குறித்து நாடாளுமன்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது இலங்கையின் மனித உரிமைகள் குறித்த விடயதானத்தில் உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியிருந்த நிலையிலேயே இந்த விசாரணை இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வவுனியா தேசிய...**

என்று பெற்றோர்கள் சிலரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் கல்வி அமைச்சிடம் விளக்கம் கோரியிருந்தோம். கல்வி அமைச்சால் கல்வியற் கல்லூரிகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற பிரதான ஆணையாளர் ஊடாக விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணைகளின் பின் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது." – என்றார்.

---

**வவுனியா வடக்கில்...**

நிராகரிக்கப்பட்டது என்று கட்சி பிரதிநிதிகளின் கூட்டத்தில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரால் கூறப்பட்டது. பின்னர் ஊடக சந்திப்பிலும் அது உறுதிப்படுத்தப்பட்டது. ஊடக சந்திப்பு முடிவடைந்து சில நிமிடங்களில் மீள ஊடக சந்திப்பு நடந்தது. இதன்போது குறித்த வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திரவால் அறிவிக்கப்பட்டமை குறித்து பலரும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் நேற்று நண்பகல் 12 மணியுடன் வேட்புமனுத் தாக்கல் நிறைவு பெற்ற பின்னர் பிற்பகல் 1 மணிக்கு கட்சி முகவர்கள், சுயேச்சைக் குழு முகவர்கள் மற்றும் கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பெண் பிரதிநிதித்துவம் தொடர்பில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு வவுனியா வடக்கில் நிராகரிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. இதன்போது குறித்த கட்சி பிரதிநிதிகளும் அமைதியாக இருந்தனர்.

அதன்பின் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஊடக சந்திப்பிலும் வவுனியா வடக்கில் 9 கட்சிகளும், 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்தன எனவும், அதில் ஒரு கட்சி, 2 சுயேச்சைக் குழுக்கள் நிராகரிக்கப்பட்டன எனவும் கூறப்பட்டது. இருப்பினும் ஊடக சந்திப்பு நிறைவடைந்து ஊடகவியலாளர்கள் பலர் வெளியேறிய பின் மீண்டும் அழைத்து வவுனியா வடக்கில் 9 கட்சிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன எனவும், 2 சுயேச்சைக் குழுக்கள் மாத்திரம் நிராகரிக்கப்பட்டன எனவும் கூறப்பட்டது. இதற்குத் தொழில்நுட்பக் கோளாறு காரணம் எனவும் கூறப்பட்டது.

அப்படியெனில் நிராகரிக்கப்பட்ட ஏனைய கட்சிகளுக்கும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இருக்க முடியாதா எனப் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது நிராகரிக்கப்பட்ட ஜனநாயகத் தேசியக் கூட்டணி (தபால் பெட்டி) கட்சி வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்களம் எடுத்த முடிவு தவறு என உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தலில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# காணி மோசடியுடன் ஷிரந்திக்குத் தொடர்பு

## விசாரணைக்குக் கோரிக்கை



"ஹிம்புல்கொட பகுதியில் இடம்பெறும் காணி அபகரிப்பு மற்றும் காணி மோசடி தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்துகின்றேன். இந்தக் காணி கொள்வனவு விவகாரத்தில் தங்காலை, கால்டன் ஹவுஸ் முகவரியை வதிவிடமாகக் கொண்டுள்ள ஷிரந்தி ராஜபக்ஷவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது."

– இவ்வாறு தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"ஹிம்புல்கொட பகுதியில் உள்ள விகாரைக்குள் பலவந்தமான முறையில் நுழைவதற்கு நான் முயற்சித்தாகக் கடந்த மாதம் செய்திகள் வெளியாகின. இந்தக் காணிக்கான உறுதிப் பத்திரத்தை முழுமையாகப் பெற்றுக் கொண்டுள்ளேன். இந்தக் காணி விகாரைக்குச் சொந்தமானது என்று உறுதிப்பத்திரத்தில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

ஹிம்புல்கொட இஹல்யாகொட கே.டி.பராக்ரம என்பவருக்குச் சொந்தமான காணி கைப்பற்றப்பட்டு ஹோமாகம தியகம மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காணி 10 இலட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் 2012.03.02 ஆம் திகதி கே.டி. தமித் பிரேமலால், என். கே. சுவர்ணலதா ஆகியோருக்குச் சொந்தமான காணிகள் தங்காலை வீதி, கால்டன் ஹவுஸ் இல.19 என்ற முகவரியில் வசிக்கும் ஷிரந்தி ராஜபக்ஷ என்பவரின் பெயருக்கு எழுதப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரத்தில் 535253314 வி என்ற தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் 5 இலட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காணிகள் 2023.10.10 ஆம் திகதியன்று அமில கொடிகார என்பவருக்கு 120 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் இடம்பெறும் காணி அபகரிப்பு தொடர்பில் இந்தப் பிரதேச மக்கள் முறைப்பாடளித்தார்கள். அதனால் தான் அங்கு சென்றேன்.

இந்தக் காணி உரித்து பத்திரத்தில் இந்தக் காணிகள் விகாரைக்கோ அல்லது விகாராதிபதிக்கோ சொந்தமானது என்று எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. விகாரைக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைய வேண்டிய அவசியம் எனக்கில்லை.

ஆகவே, இந்தப் பகுதியில் இடம்பெறும் காணி அபகரிப்பு மற்றும் காணி மோசடி தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்துகின்றேன்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தமிழர்களுக்கு...**

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குங்கள். முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையுடன் இணைந்து செயற்படுவது சுலபமானதாகக் காணப்பட்டது. அவர் அனைத்தையும் புரிந்துகொண்டார்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பேட்டியொன்றில் இதனைக் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதை நான் எப்போதும் எதிர்த்து வந்துள்ளேன். நான் என்ன தெரிவித்து வருகின்றேன் என்றால் சொன்னதைச் செய்யுங்கள். ஐ.நாவுக்கு இலங்கை அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். உள்ளகப் பொறிமுறையின் கீழ் தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டுங்கள். இதனைச் செய்யக்கூடாது, செய்யவேண்டாம் என நான் ஒருபோதும் தெரிவித்ததில்லை. இதன் காரணமாகவே நான் தேர்தல்களில் தோற்றேன்.

நான் விடுதலைப்புலிகளை ஆதரிப்பதாகக் குற்றம் சாட்டினார்கள். அது முடிவடைந்ததும் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவளித்ததாகக் குற்றம் சாட்டினார்கள்.

அதனை விடுவோம். ஆனால், நான் மேற்குலகில் சமீபத்தில் பார்த்தது என்னவென்றால் இரண்டு விதமான நிலைப்பாடுகள்.

உக்ரைன் தொடர்பில் இரட்டை நிலைப்பாடுகளைப் பின்பற்றுகின்றனர்.

ஆனால், உக்ரைனுக்கு வழங்குகின்ற சாதக தன்மையை மேற்குலகம் எங்களுக்கு வழங்காது. எனினும், உக்ரைன் ஜனாதிபதிக்கு அனைத்தையும் மாற்றுவதற்கான அனுமதியை அவர்கள் வழங்குகின்றார்கள்.

இதன் காரணமாகவே அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஜெலென்ஸ்கியைப் பார்த்து நீங்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவில்லை என்றார்.

அவர்களால் ஜனாதிபதி ட்ரம்பின் மீது பாய முடியுமென்றால் எங்களின் நிலைமை என்ன?

ஆகவே, எங்களால் என்ன செய்ய முடியுமென்றால் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே.

அவர்களுடன் பேசுங்கள் மாகாண சபைகளுக்கு மேலதிக பொறுப்புக்களை வழங்குங்கள்.

குற்றவாளிகள் யார் என்றாலும் தண்டியுங்கள். நான் பல நடவடிக்கைகளை ஆரம்பித்தேன்.

ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இரட்டை நிலைப்பாடுகளைப் பின்பற்ற விரும்பினால் இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அது அமைந்திருக்கக் கூடாது.

நான் எவருக்கும் எதிரானவன் அலலன். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசியக் கிளையின் செயற்பாடுகள் குறித்து விசாரணை இடம்பெற்றால் நாங்கள் தொடர்ந்தும் நீடிக்கலாம்.

முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் செயற்படுவது சுலபமாக இருந்தது. அவர் அனைத்தையும் புரிந்துகொண்டார். அவர் எங்களது நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவர் அனைத்தையும் புரிந்துகொண்டார். அவருடன் பேச முடியும்.

ஆனால், தற்போதுள்ளவர்கள் எங்களை நோக்கிச் சத்தமிடுகின்றனர். எங்களால்தான் அவர்கள் அங்கிருக்கின்றார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

நாங்களே இரண்டாம் உலக யுத்தத்தில் போரிட்டோம். நாங்களே ஐரோப்பாவை விடுதலை செய்தோம்.

எத்தனை ஐரோப்பியர்கள் ஹிட்லருக்கு எதிராகப் போரிட்டார்கள். இரண்டரை மில்லியன் இந்தியர்கள் போரிட்டார்கள். இலங்கையர்கள் போரிட்டார்கள். ஆபிரிக்கர்கள் போரிட்டனர்.

நாங்கள் போரிட்டு ஹிட்லரைத் தோற்கடித்திருக்காவிட்டால் உங்களால் மனித உரிமை சாசனம் ஒன்றை உருவாக்க முடியாமல் போயிருக்கும்." – என்றார்.



# 15 வயது சிறுமிக்குப் பாலியல் துன்புறுத்தல்: இளைஞர் ஒருவர் கைதாகி விளக்கமறியலில்

(கி.வசந்தன்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் சிறுமி ஒருவருக்குப் பாலியல் துன்புறுத்தல் செய்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

தோணிக்கல் பகுதியில் வசிக்கும் 15 வயது சிறுமியை அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் காதலித்தார் எனவும், மேற்படி சிறுமிக்குப் பாலியல் துன்புறுத்தல் செய்தார் எனவும் சிறுமியின் தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் சிக்குன்குனியா

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை உட்பட பல நாடுகளையும் வறுத்தெடுத்த சிக்குன்குனியா நோய்த் தொற்று மறக்கக் கூடியதன்று.

சிக்குன்குனியா நோய் பாதித்தவர்கள் நாள் முழுவதும் எலும்புகள் மற்றும் தசைகளில் வலி ஏற்படுவதை உணர்வர். சிக்குன்குனியா பாதித்த போது மட்டுமின்றி, சிக்குன்குனியாவில் இருந்து மீண்ட போதும், ஒரு வருடத்துக்குப் பிறகு கூட அதன் பாதிப்புகளில் இருந்து சிலரால் மீள முடியாது. அத்தகைய நெருக்கடியைத் தரக் கூடிய மோசமான தொற்று அது.

இலங்கை முழுவதும் சிக்குன்குனியா நோயாளிகளின் எண்ணிக்கை அண்மைக்காலத்தில் அதிகரித்து வருவதால், அதன் அறிகுறிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, இந்த நோய் பொதுவாக திடீரென அதிக காய்ச்சலுடன் ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து கடுமையான மூட்டு வலி ஏற்படுகிறது. இது குறைந்தது ஒரு மாதத்திற்கு நீடிக்கும்.

தசை வலி, தலைவலி, குமட்டல், சோர்வு மற்றும் தோல் வெடிப்புகள் ஆகியவை பிற பொதுவான அறிகுறிகளாகும்.

பெரும்பாலான நோயாளிகள் ஒரு வாரத்திற்குள் குணமடைந்தாலும், நீடித்த மூட்டு வலி பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட நீடிக்கும். குறிப்பாக வயதான நபர்களிடையே நோயின் தன்மை நீடிக்கும் என்று கூறப்படுகின்றது.

டெங்கு போல இதுவும் நுளம்பினால் பரவுவதுதான். நுளம்பு இனப் பெருக்கம் செய்யும் இடங்களை அகற்றுவதுதான் தொற்றுநோயைக் கட்டுப்படுத்த மிகவும் பயனுள்ள வழியாகும் என்று நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

மேலும் இரத்தப் பரிசோதனை மட்டுமே நோய்த்தொற்றைக் கண்டறிய ஒரே உறுதியான வழி.

அத்தோடு சிக்குன்குனியாவுக்குத் தடுப்பூசிகள் எதுவும் இல்லை. ஆகையால் தொற்றுப் பரவல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே வரமுன் தடுப்பதற்கான பிரதான மார்க்கமாகும்.

சிக்குன்குனியா என்பது ஏடிஸ் நுளம்புகளால் பரவும் ஒரு வைரல் நோயாகும். இந்த வைரஸ் முதன் முதலில் 1953 இல் தான்சானியாவில் கண்டறியப்பட்டது. வைரஸ் மற்றும் நோய் ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தப்படும் சிக்குன்குனியா என்ற சொல், சில கிழக்கு ஆபிரிக்க மொழிகளில் “குனிந்து நடப்பது” என்று பொருள்படும். மேலும் இது டெங்கு போன்ற தொற்றுநோயைக் குறிக்கும் மூட்டு வலிகளின் விளைவையும் குறிக்கிறது.

ஒக்டோபர் 2006 நடுப்பகுதியில் தொடங்கிய இந்தத் தொற்றுநோய்ப் பரவல் இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளிலிருந்து முதல் சில மாதங்களில் 37, 000 க்கும் மேற்பட்ட தொற்றுக்கள் பதிவாகி பலரையும் முறித்துப் போட்டது என்று கூறினால் மிகையாகாது. மதிப்பிடப்பட்ட புள்ளிவிவரங்கள் 2006-2007 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் சுமார் 40,000 நபர்கள் பாதிக்கப்பட்டனர் எனவும் 2008 ஆம் ஆண்டிலும் இதேபோன்ற எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டனர் எனவும் சுட்டிக்காட்டுகின்றன.

இப்போது அது மீண்டும் தன் கைவரிசையைக் காட்டத் தயாராகி வருவதாகத் தெரிகின்றது. அதனைத் தடுக்க சுகாதார அதிகாரிகள் மற்றும் அரசுக் கட்டமைப்புடன் சேர்ந்து பொறுப்புடன் செயல்பட மக்கள் முழு மூச்சுடன் முனைய வேண்டும். இல்லையேல் இன்னொரு சுகாதாரப் பின்னடைவை - தொற்றுநோய்ப் பாதிப்பை - இலங்கை எதிர் கொண்டு உழல வேண்டி நேரும்.





# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இப்தார்!

(எம். எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் ஒழுங்கு செய்த இப்தார் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் பீ ரி எம். இர்பான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு சம்மாந்துரை பிரதேச செயலாளர் எஸ் எல் எம்.ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் நஹிஜா முஷாபிர் மற்றும் பிரதேச செயலக உத்தியோத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மார்க்க சொற்பொழிவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# தேசிய வாசிப்பு மாத போட்டிகளின் வெற்றியாளர்களுக்குப் பரிசளிப்பு

(எச் எம் ஹலால்தீன் )

கிண்ணியா நகர சபையும் கிண்ணியா பொது நூலகமும் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 2025 இல் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இடம்பெற்றது. இந்தப் பரிசளிப்பு விழா கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடை பெற்றது.

கிண்ணியா நகர சபை செயலாளர் எம். கே. எம். அனிஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிண்ணியா நூலகப் பொறுப்பாளர் முஹம்மது மசூத், வாசக வட்ட உறுப்பினர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கவிதை, பட்டிமன்றம், வினா விடை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.







# அம்பாறையில் புதிய கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு நியமனம்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தில் தாமதபட் டியலில் தெரிவான ஆறு புதிய கிராம சேவை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களுக்கு பயிற்சிக்காக கடந்த 18 ஆம் திகதி யில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த நியமன கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன் சிறப்பு விருந்தி னராகக் கலந்து கொண்டார்.

குறித்த ஆறு புதிய கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு கடந்த இரு வாரங்களாக மாவட்ட செயலகத்தால் பயிற்சி வழங்கப்பட்டது.

நடத்தப்பட்ட பயிற்சியின் பின்னர் மேலதிக பயிற்சிக்காகத் தற்போது பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப் பட்டுள்ளனர்.

அதன் பின்னர் மூன்று மாதங்கள் அதே பிரதேச செயலாளர் பிரிவில் உயர் நிர்வாக அதிகாரியின் கீழ் பயிற்சி பெற்றதன் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

தாமதப் பட்டியலில் தெரிவான இந்த ஆறு பேரும் ஆலையடிவேம்பு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, லாகு கல, தெஹியத்தகண்டிய, உகன, இறக்காமம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

# தனியார் வைத்தியசாலை உரிமையாளருடன் கல்முனை சுகாதார பணிப்பாளர் கலந்தாய்வு

**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை பிராந்தியத்தில் உள்ள தனியார் வைத்திய சாலைகளின் சேவைகளை மதிப்பீடு செய்து பொது மக்களுக்கு இலகுவான இணைந்த சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனுக்கும், தனியார் வைத்தியசாலை உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று பிராந்திய பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது கண் சத்திர சிகிச்சை உள்ளிட்ட நோய் கள், விசேட வைத்திய நிபுணர்களின் சேவைகள், வைத் தியசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு



பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிரும் கலந்து கொண்டார்.



# பிரதான தபால் நிலையங்களில் கற்பகம் காட்சிக் கூடம் அமைப்பு!

## பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை

(த.சுபேசன்)

பிரதான தபால் நிலையங்களில் கற்பகம் காட்சிக் கூடங்களை நிறுவ பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் முதற்கட்டச் செயற்பாடாக நேற்று (20) வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையத்துக்குப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவனுடன், சபையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ப.சுதாகரனும் நேரடியாகச் சென்று கற்பகம் காட்சிக் கூடம் நிறுவுவதற்கான ஏது நிலைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் ஒரு வார காலத்துக்குள் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ். பிரதான தபால் நிலைய அதிபர் திருமதி சாந்தகுமாரி பிரபாகரனுடைய பெறுமதிமிக்க ஆலோசனைக்கு அமைவாக பனை அபிவிருத்திச்சபை குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தபால் நிலையங்களில் கற்பகம் காட்சிக்கூடம் நிறுவும் செயற்றிட்டம் வெற்றியளித்தால் அது சிறிய அளவிலான விற்பனை மற்றும் உற்பத்தியாளர்களுக்கு மிகப்பெரியதொரு வாய்ப்பாக அமையும். அத்துடன் சிறிய அளவிலான ஏற்றுமதிச் சந்தையை செய்ய எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் உரிய தீர்வாக அமையும்.

ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான மாதிரிகளைத் தர நிர்ணயத்தோடு உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும். அரச வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் புதிய அரசின் கொள்கைத் திட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாகவும் இந்தப் புதிய திட்டம் அமைந்துள்ளது.- என்றார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET




1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998





# உலக வாய் சுகாதார தினத்தில் பற் சுகாதார விழிப்புணர்வு

**(நூருல் ஹுதா உமர்)**

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கான பற் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு இன்று (21) இடம்பெற்றது.

சாய்ந்தமருது - 2 பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள தபாலக வீதியில் அமைந்துள்ள லீட் த வே முன்பள்ளி மாணவர்களுக்கான வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு பாடசாலை பல் சிகிச் சையாளர் கே.வித்யாஷினியால் நாத்தப்பட்டது. பல் துலக்கும் முறை தொடர்பான செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டது.

அத்துடன் சிறுவர்களுக்குப் பற்தூரிகைகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், குடும்ப நல உத்தியோகத்தர் எம்.எல்.நஜீஹா, பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.எம். நிஸ்தார் ஆகியோரும் கலந்து கொண் டனர்.



# பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும்

## கிழக்கு மாகாண ஆளுனர் உறுதி தெரிவிப்பு

**(ஹஸ்பர் ஏ.எச்., அபு அலா)**

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகரவுக்கும் இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்துக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (20) திருகோண மலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செய லாளர், எச்.இ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க, மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் டி.ஜி.எம். கொஸ்தா, இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கங்கத்தின் தேசிய அமைப்பாளர் உபுல் ரோஹண மற்றும் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சி னைகளைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் ஆளுநரிடம் முன்வைத்தது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை விரவில் எடுப்பார் என்று ஆளுநர் கூறினார்.



# மானிப்பாய் மருதடி விநாயகருக்கு நாளை கொடியேற்றம்!

ஈழத்திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களிலொன்றாகப் போற்றப்படும் இத்தலம் பற்றிய பல்வேறு ஐதீக வரலாறுகள் கூறப்படுகின்றது. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு சென்ற நூற்றாண்டில் பொதுக்கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொது மக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

காலம் தவறாத பூசை வழிபாட்டு ஒழுங்கு, திருப்பணி வேலைகள், அறநெறிப் பாடசாலை, ஆலய நிர்வாகம் என மிகவும் சிறப்பாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் நாளை (22) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெற்றவுள்ளது.

புதுவருடப்பிறப்பு தினமான சித்திரை 14 ஆம் திகதி இரதோற்சவம் இடம்பெறும்.

“மின்னும் மருதடி வாழ் வேழமுகன் றாள் பணிந்து
பன்னுவவன் காதை பகர்ந்திடவே - மன்னுபுகழ்
நீட்டு மலைமேல் நிகழ்பா ரதம்வரைந்த
கோட்டுமுகன் பாதங் குறி”

என்று போற்றுகின்ற மருதடி விநாயகரின் அற்புதத் தைக் காண பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் மகோற்சவ காலத்தில் எம்பெருமானின் சந்நிதானத்துக்கு அலை அலையாகத் திரண்டு வருவார்கள்.

ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று பல்லாயிரக் கணக்கான பத்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் இரதோற்சவத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற் காக பல ஊர் மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கித் தினமும் வருவர்.

இவ்வாலயத்தில் மூன்று காலப் பூசைகள் காலந் தவறாது நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதத்தி லும் அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தி திதியில் விநாயகப் பெருமானுக்கு விஷேட பூசைகள் நடைபெறும். ஆவணிச் சதுர்த்தி தினமானது பெருமானது திருசந்திதானத்தைப் பார்ப்பவர் கண்களைப் பூரிக்கச் செய்கின்றது.

இந்தச் சதுர்த்தி ‘தேவர்கள் முனிவர் சித்தர் கந்தரு வர் யாவரும் வந்திவனேவல் செய்திடும்நாள்’ ஆக போற்றப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் விநாயகவிரதம் ஆரம்பமாகி இருபத்தொரு நாள்களாய் பிள்ளையார்கதை வாசிக்கப்பட்டு கடைசி நாளில் கஜமுகா சூரசங்காரம் நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்று.

மருதமரத்துப் பிள்ளையார் வருசத்திலே பங்குனி மாதத்தில் உற்சவம் ஆரம்பமாகி தமிழ்ச் சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று இரதோற்சவமாகக் கொண்டு ஆரம்ப காலத்தில் இருந்து 2004 ஆம் ஆண்டுவரை பதினெட்டு நாள்கள் உற்சவமும் 2004 உற்சவத்தையடுத்து புனரமைக்கப்பட்டு கருங்கல் கோவிலாக மீண்டும் 2014 ஆம் ஆண்டில் புதுபொலிவு பெற்று 48 நாள்கள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று அதனையடுத்து 25 நாள்களாக உற்சவ நாள்கள் மாற்றம் செய்யப்பட்டு 25 நாள்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.


மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும் வழங்கல், பிள்ளை விற்று வாங்கல், மடிப்பிச்சை எடுத்தல், பட்டுச் சார்த்தல், தேவாரம் ஓதுதல், வடம்பிடித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இந்தக் காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டுக்காக நடத்தப்படுகின்றன. மருத மரத்தடியில் வீற்றிருந்தருளும் விநாயகப்பெருமான் வேண்டும் அடியவர்க்கு வேண்டும் வரங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

பூவாழி மன்னர்மநு நீதி வாழி
புகலரிய மடமகளீர் நிறையும் வாழி
ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி
அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி
ஓவாத தவங்கருணை விரதம் வாழி
உலகிலுள்ள சாரசரங்க ளனைத்தும் வாழி
மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்
மருதடியிற் கணபதிதாள் வாழிவாழி.

என்று மகோற்சவ காலத்தில் விநாயகப்பெருமானை மெய்யுருகி வழிபாடாற்றி சைவர்களாக சைவ வாழ்வு வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்களை நாம் பெற்றுய்வோமாக.

**பண்டிதர், சைவப்புலவர்**
**எஸ்.ரி.குமரன், செயலாளர்,**
**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.**



# ஜப்பானின் நிதி உதவியின் கீழ் தீ அணைப்பு உபகரணங்கள்!

## 590 மில்லியன் ரூபா மானியம்

இலங்கை முதலீட்டு சபை யின் கீழ் செயல்படும் ஏற்றுமதி வலயங்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாடு முழுவதும் உள்ள 14 ஏற்றுமதி வலயங்களிள் உள்ள 285 நிறுவனங்களில் சுமார் ஒரு லட்சத்து 45 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த வலயங்களில் தீயணைப்புத் திறனை மேம்படுத்துவது ஊழியர்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மிக முக்கியமானதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜப்பானின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 4 ஆயிரம் லீட்டர் தண்ணீர் தொட்டி கொள்ளளவு கொண்ட நான்கு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் கட்டுநாயக்க, பியகம, சீதாவக மற்றும் வத்துபிடி வலை தொழில்துறை வலயங்களுக்கு 12 செட் உபகர ணங்களைக் கொள்வனவு செய்ய 300 மில்லியன் ஜப்பானிய யென் (590 மில்லியன் ரூபா) மானியம் வழங்கப்பட்டுள் ளது.


இந்த உதவிகள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கணிசமாக அதிகரிக்கும் என்றும் இந்த அலகுகளின் உடனடி அவசரகால பதில்கள் காரணமாக தொழிலாளர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்கவும், இழப்புகளைக் குறைக்கவும் உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முக்கியமான மானியத்தை முறைப்படுத்துவதற்காக, நேற்று (20) நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்தில் அதிகாரப்பூர்வ கையொப்பமிடும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த பரிமாற்றக் குறிப்புகளில் இலங்கை அரசின் சார்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தனவும், ஜப்பான் அரசின் சார்பாக இலங்கைக்கான ஜப்பான் தூதர் அகியோ இசோமட்டாவும் கையெழுத்திட்டனர்.

இந்த மானியத்துக்காக இலங்கை அரசு ஜப்பானுக்கு தனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளது.

இந்த ஒத்துழைப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மற்றும் நீடித்த கூட்டாண்மையை வலுப்படுத்துவதோடு, இலங்கைக்கு மிகவும் நிலையான எதிர்காலத்துக்கு வழி வகுக்கும் என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.





# நாளை உலக நீர் தினம்!

**(மார்ச் 22 உலக நீர் தினமாகும். அதனை நினைவுகூரும் முகமாக இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)**

அனைத்து உயிரினங்களின் தொடக்கம் நீர் என்று உயிரியலும், பூமியில் 71 சதவிகிதம் பரப்பைக் கொண்டது நீர் என்று புவியியலும், இரண்டு பங்கு ஹைட்ரஜன் அணுவும், ஒரு பங்கு ஒட்சிஜன் அணுவும் சேர்ந்ததுதான் நீர் என்று இரசாயனவியலும், நிறமும் மணமும் அற்ற தெளிவான திரவம் தான் நீர் என்று பௌதீகவியலும், மனித நாகரீகத்தின் தொட்டில் என்று வரலாறும், உயிரைப் படைக்க, காக்க, அழிக்க வல்லது நீர் என்று தத்துவமும் கூறினாலும் இந்த நூற்றாண்டில் உலக நாடுகளுக்கு இடையே, ஏன் மனித சமுதாயத்துக்குள்ளேயே பிளவை ஏற்படுத்தப்போவதும் நீர் என்பதே நிதர்சனமான உண்மை.

**குடி தண்ணீரின் முக்கியத்துவம்**

நீர் இன்றேல் உலகமே இல்லை என்றளவுக்கு நீரானது மிகவும் முக்கியத்துவமிக்க தொன்றாகவே காணப்படுகிறது. ஒரு மனிதனுடைய வாழ்வில் அனைத்து செயற்பாட்டுக்கும் நீரானது அடிப்படையானது. அதாவது மனித உடல் இயக்க செயற்பாடுகளுடன் பாதுகாப்பான குடி தண்ணீரில் உள்ள கனிமங்களின் கிடைப்பனவுதான் ஆரோக்கியமான உயிர்வாழ்வுக்கு அடிப்படையானதாகும். மேலும் அன்றாட பணிகளை நிறைவேற்றிக் கொள்தல், விவசாயம், பொழுதுபோக்கு மற்றும் உற்பத்தி துறைகள் அனைத்துக்கும் நீரே ஆதாரமாகும். நீரின் முக்கியத்துவத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்து சொல்லும் கட்டாயத்தில் இன்றைய தலைமுறை உள்ளது.

**உலக நீர் தினம்**

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா. மாநாட்டின் தீர்மானத்துக்கு அமைவாக மார்ச் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐ.நா. பொதுச் சபை பிரகடனம் செய்தது. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் விசேட தொனிப் பொருளுடன் இந்தத் தினம் நினைவு கூரப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு “அமைதிக்கான நீரை மேம்படுத்துதல்” என்ற கருப்பொருளையும் இவ்வாண்டு “பனிப்பாறை பாதுகாப்பு” என்பதையும் முதன்மைப்படுத்தி உலக நீர்தினம் நினைவு கூரப்படுகின்றது.

அந்தவகையில் பனிப்பாறைகள் ஆரோக்கிய மான சுற்றுச்சூழல் செயன்முறைகளுக்கு அவசியமானவையாகும். வேகமாக உருகும் பனிப்பாறைகள் சமுத்திர நீர் ஓட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனால் உயிரியல் மற்றும் இயற்கை சமநிலைகளில் ஆழமான தாக்கங்கள் ஏற்படுகின்றன. கார்பன் வெளியேற்றத்தில் கட்டுப்பாடு மற்றும் சுருங்கி வரும் பனிப்பாறைகளுக்கு ஏற்ப உள்ளூர் உத்திகள் அவசியம் என்பதுடன் இந்த உலக நீர் தினத்தில், காலநிலை மாற்றம் மற்றும் உலகளாவிய நீர் நெருக்கடியைச் சமாளிக்கும் நமது திட்டங்களின் மையத்தில் பனிப்பாறை பாதுகாப்பை முதன்மைப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என இவ்வாண்டுக்கான உலக நீர் தினம் தொடர்பான ஐ.நா. சபை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் உலக நீர் தினம் நினைவு கூறப்பட்டால் மட்டும் போதாது. அதன் தாற்பரியம் பேணப்படல் வேண்டும். மனித வாழ்வோடும் சடங்கு சம்பிரதாயங்களோடும் பின்னிப் பிணைந்தது தண்ணீரின் வரலாறு என்பதை உணர்ந்து செயற்பட கடமைப்பட்டுள்ளோம்.

**குடி தண்ணீரும் அரசியலும்**

குடி தண்ணீர் மீதான அரசியல் என்பது நீர் மற்றும் நீராதாரங்களால் பாதிக்கப்படும் அரசியல் ஆகும். இதன் காரணமாக நீர் உலக முக்கியத்துவம் வாய்ந்த வளமாகவும் பல அரசியல் சண்டைகளின் முக்கிய காரணமாகவும் இருந்திருக்கிறது. அது உடல் நல பாதிப்பையும், பல்லுயிர் விருத்தியையும் பாதிக்கக்கூடியது. ஐக்கிய நாடுகள் அறிக்கையின்படி “அனைவருக்கும் போதுமான அளவு நீருள்ளது, ஆனால் அதனைக் கிடைக்காமல் செய்வது தவறான நிர்வாகமும், நேர்மையின்மையுமேயாகும்” என குறிப்பிடப்பட்டவை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

எமது பிராந்தியத்திலும் நீருக்காக பிரதேசத்துக்குப் பிரதேசம் முரண்பாடுகள் தோன்றுவதை நடைமுறை வாழ்க்கையில் கண்டுகொள்ள முடிகின்றது. இலங்கையின் ஈழத்தமிழர்களின் இறுதி அழிவுகளின் தொடக்கத்துக்கு மாவிலாற்று நீர்தான் காரணமாக இருந்தது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். அத்தோடு தற்காலச்சூழல் போன்று எதிர்காலத்திலும் தேசியப் பிரச்சனை தடம்மாறி, நீர்த்துப்போனால் நீரை அடிப்படையாகக் கொண்ட பிரதேசவாதப் பிரச்சினைகளை உருவாக்கி இந்தியாவைத் தழுவி இங்கும் அரசியல் செய்வார்கள்

தொடர்ச்சி▼

# நாளை உலக நீர் தினம்!

**தொடர்ச்சி▲**

என்பதை கட்டியம் கூறும் வகையில் உள்நாட்டுப் போருக்குப் பின்பு இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டங்களுக்கான முயற்சிகளின் போது நடைபெற்ற கசப்பான நிகழ்வுகள் இதற்குக் கட்டியம் கூறி நின்றன என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

**நீர்வளம் காப்போம்**

அருகி வருகின்ற நீர் வளத்தை விருத்தி செய்து, நீர் மூலவள பாதுகாப்பை நன்கு வலுப்படுத்தி நாளாந்தம் பெரும் சவாலாக அமைந்து வருகின்ற நீர் பற்றாக்குறை மற்றும் நெருக்கடியைத் தீர்ப்பதே உலக நீர் தினம் ஆண்டுதோறும் நினைவுகூரப்படுவதன் பிரதான நோக்கமாகும்.

அத்துடன் நாடுகளின் அந்தந்த சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப அந்தப் பிரதேசங்களின் நீர் வளப் பாதுகாப்பு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதலுடன் நாட்டின் எதிர்காலப் பிரஜைகளாக சமூகத்தின் பல சவால்களை எதிர்கொள்ளக் காத்திருக்கும் மாணவ சமூகத்துக்கும் இளந் தலைமுறையினருக்கும் நீர் பாதுகாப்புப் பற்றி விழிப்புணர்வு அளிப்பதும் இன்றைய உலக நீர் தினத்தின் முக்கியமான நோக்கங்களாகும்.

**மழை நீர் சேகரிப்பு**

மழைநீர் சேகரிப்பு என்பது மழை நீரை வீணாக்காமல் சேமித்து நாளாந்த தேவைகளுக்கு பயன்படுத்த முடியும். இத்திட்டத்தின் மூலம் இலகுவாக நீர்தேவையை நிவர்த்தி செய்ய முடியும். மழைநீர் ஒன்றே எளிதில் கிடைக்கக் கூடிய, சிக்கனமான நீர் ஆதாரம். இத்திட்டம் உள்ளூரிலேயே கிடைக்கும் விலை மலிவான மூலப் பொருள்களைக் கொண்டு எளிதாகக் கட்டமைக்கப்பட்டு, பெரும்பாலான வசிப்பிடங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தக் கூடியது.

ஆனால் இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் கிடைக்கப்பெறும் மழை நீரைச் சேமித்து பயன்படுத்தும் நடைமுறையில் குறிப்பிடக் கூடிய முன்னேற்றம் ஏற்படவில்லை. மழை நீர் சேமிப்புக்களுக்காக பொது இடங்களிலும் சில தனியார் வீடுகளிலும் அரச மற்றும் தொண்டு நிறுவனங்களால் பெரும் நிதி செலவில் அமைக்கப்பட்ட மழைநீர் சேமிப்புத் தொகுதிகளில் பல இன்றும் பயன்படுத்தப்படாமல் காட்சிப்பொருளாகவே உள்ளன. இவற்றைச் சரியாக பயன்படுத்தக் கூடிய சமூக மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றபோது சுயசார்பு நீர்த் தேவையை நிவர்த்தி செய்ய முடியும்.

**தண்ணீர் போத்தல் கலாச்சாரம்**

பிறந்தநாள் கொண்டாட்டம் முதல் மரணச்சடங்குவரை அண்மைக் காலமாக "மினரல் வோட்டர்" என்ற போர்வையில் அரை லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடி தண்ணீர் தாராளமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். உண்மையில் அவை "மினரல் வோட்டர்" அல்ல மாறாக "மினரல் நீக்கப்பட்ட வோட்டர்" என்பதே சரியானது.

எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் பெற்றிருந்தாலும் அவை ஆபத்தில்லை என்பதற்கான உத்தரவாதமே தவிர ஆரோக்கியமானது என்பதற்கானதல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு பெற்றுக்கொள்ளும் போத்தலில் உள்ள நீர் முழுமையாக பயன்படுத்தப்படாமல் வீணடிப்பது ஒருவகை நாகரீகமாக பின்பற்றப்படுகிறது. உண்மையில் அரை லீற்றர் நீரை சுத்திகரிப்பதற்கான செலவில் பார்க்க அந்த போத்தல் உற்பத்திக்கான செலவு அதிகமாகும் இதன் மூலம் வீண்விரயம் செய்யப்படுவது ஒருபுறமிருக்க பிளாஸ்ரிக் போத்தல் கழிவுகள் மூலம் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக யாரும் சிந்திப்பதில்லை.

அதற்கு மேலாக போத்தல் நீர் முறையாக பேணப் படாததன் காரணமாக பிளாஸ்ரிக் போத்தலில் உள்ள




பதார்த்தங்கள் குறிப்பாக மைக்ரோ பிளாஸ்ரிக் போன்றன நீரில் கலப்புற்று உடலுக்குள் சென்று மூளையின் கலங்களை பாதித்து புற்றுநோயை உருவாக்கக் கூடிய ஆபத்துக்கள் இருப்பதாக அண்மைக்கால ஆய்வுகளில் எச்சரிக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவை தொடர்பான மூலக்கூறுகளின் நுண்மட்டத்திலான பரிசோதனைகள் எவையும் இங்கு மேற்கொள்ளப்படுவதில்லை என்பது கவலைக்கு உரியதாகும். அத்துடன் சுகாதாரப் பகுதிக்கு உள்ள உணவுக் கட்டுப்பாட்டு சட்ட நடைமுறைகள் பெரும்பாலும் குடி தண்ணீருக்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்பது பாரிய குறைபாடாகும்.

"போதையில் உள்ளவரின் குருதியில் உள்ள நம்பிக்கை கூட போத்தலில் உள்ள குடி தண்ணீரில் இல்லை" என்ற நியாயமான கருத்து நிலவுகின்ற மோசமான நிலைமைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

**நீருக்கான விழிப்புணர்வு**

வருடாந்தம் நீர்த்தேவை அதிகரித்துச் செல்கின்றது. எனவே அரிதாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையுமென குறிப்பிடப்படுகின்றது. குடி தண்ணீரைத் தேடி நாளாந்தம் மைல்கணக்கில் நடக்கும் மக்கள் உலகில் வாழ்கிறார்கள் என்பதை பலர் அறியாதுள்ளனர் என்பதே கவலைக்குரியது.

எனவே, 'நீர் எங்கள் உயிருக்கு நிகர்' என்று நாம் கருதிச் செயற்பட வேண்டும். ஒவ்வொரு துளி நீரும் பெறுமதி வாய்ந்தது, 'நீர் இன்றேல் பார் இல்லை' என்று நாம் உணர வேண்டும். அனைத்து வளங்களுக்கும் தாய்வளம் தண்ணீர். ஊர் வளம் பெற, பார் வளம் பெற நீர் வளம் காப்போம் என இன்றைய தினத்தில் திட சங்கற்பம் பூணுவோம். நீரின் அருமையைப் பற்றியும் நீரைச் சேமிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இன்றியமையாதது.

நீர் வளத்தைப் பற்றிய மக்களின் எண்ணங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவது உடனடியாக தொடங் கப்பட்டு, ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.



**அ.அன்ரன் கமிலஸ்,**
**பொறுப்பதிகாரி,**
**தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்,**
**கிளிநொச்சி.**

# அதிக குற்றங்கள் நடப்பதாக திட்டமிட்டு வதந்தி: சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் விளக்கம்



“தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் குற்றங்கள் நடைபெறுவது போன்ற தவறான கருத்து திட்டமிட்டு பரப்பப்படுகிறது. கடந்த 12 ஆண்டுகளில் 2012 இல் அ.தி.மு.க. ஆட்சியில் தான் அதிகபட்சமாக 1,943 கொலைகள் நிகழ்ந்துள்ளன.”

- இவ்வாறு சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும், எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி, தமிழகத்தில் நடந்து வரும் கொலை சம்பவங்கள் குறித்து குற்றம்சாட்டி பேசினார். இதனால், கடும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. அவர் தொடர்ந்து பேச அனுமதி மறுக்கப்பட்டதால், பழனிசாமி தலைமையில் அ.தி.மு.கவினர் வெளிநடப்பு செய்தனர்.

இதன்பிறகு, முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“குற்ற சம்பவங்களே நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. அவற்றில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதுதான் முக்கியம். முந்தைய ஆட்சியில் தூத்துக்குடி, சாத்தான்குளம் போன்ற சம்பவங்களை நீங்கள் மறந்துவிட கூடாது. தவிர, உங்களைப் போல, டி.வி. பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று சொல்ல நாங்கள் தயாராக இல்லை.

கடந்த 19 ஆம் திகதி தமிழகத்தில் 4 கொலைகள் நடந்திருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் கூறினார். கோவையில் நடந்தது முதல்கட்டமாக தற்கொலை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரை சம்பவம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. சிவகங்கை கொலை சம்பவத்துக்கு காரணம் குடும்ப தகராறு என தெரியவந்துள்ளது. சேலத்தில் கிச்சிப்பாளையம் சரித்திர பதிவேடு குற்றவாளி செல்லதுரை கடந்த 2020 இல் கொல்லப்பட்ட வழக்கில், 2 ஆவது எதிரியான சாணக்கியனை பழிவாங்கும் நோக்கத்தில் ஈரோட்டில் கொலை நடந்துள்ளதாக தெரியவருகிறது. பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எந்த கட்சியினராக இருந்தாலும் பொலிஸார் பாரபட்சமின்றி, சுதந்திரமாக செயல்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குற்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சம்பவங்கள் நிகழ்ந்த பிறகு எடுக்கப்படும் துரித நடவடிக்கைகள் என இரு வகையிலும் காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. குண்டர் சட்டத்திலும் கைது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குண்டர் சட்டத்தில் கடந்த ஆண்டு மட்டும் 4,572 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2023 இல் கொலை, கொலை முயற்சி உள்ளிட்ட குற்றங்கள் 49,280 ஆக இருந்தது. 2024 இல் அது 31,498 ஆக குறைந்துள்ளது. ஒரே ஆண்டில் 17,782 குற்றங்களை குறைத்திருக்கிறோம்.

சமூக ஊடகங்களில் கொலை குற்றங்கள் தொடர்பான காட்சிகள் வெளிவரும்போது, அதிக எண்ணிக்கையில் குற்றங்கள் நடைபெறுவது போன்ற தவறான கருத்து திட்டமிட்டு பரப்பப்படுகிறது. உண்மையில், 2024 இல் கொலை குற்றங்கள் 6.8 சதவீதம், அதாவது 109 கொலைகள் குறைந்துள்ளன. பழிவாங்கும் கொலைகளின் எண்ணிக்கை 42.72 சதவீதம் குறைந்துள்ளது.

குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி தருவதிலும் அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. 2023 இல் 181 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கும், 2024 இல் 150 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடுங்காவல் தண்டனை உட்பட 242 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு நீதிமன்றங்கள் மூலம் தண்டனை வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்குகளில் பொலிஸ் காட்டிய தீவிர அக்கறையே இதற்கு காரணம்.

குற்றங்களை தடுத்து, மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்து, பொது அமைதியை தொடர்ந்து நிலைநாட்ட எனது தலைமையில் பொலிஸ் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அங்கொன்றும், இங்கொன்றுமாக முன்விரோதம் காரணமாக நடைபெறும் சில நிகழ்வுகளை வைத்து, இந்த அரசு மீது பழி சுமத்தி அரசியல் ஆதாயம் அடைய நினைப்பவர்கள் கடந்த ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு எப்படி சீரழிந்து கிடந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.” என்றார்.

# இந்திய அரசாங்கம் மீது வழக்கு தொடரும் எக்ஸ்



எலான் மஸ்க்கின் சமூக ஊடக தளமான எக்ஸ் , இந்திய அரசாங்கத்திற்கு எதிராக சட்டப்பூர்வ சவாலைத் தொடங்கியுள்ளது.

இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அதன் தணிக்கை திறன்களை சட்டவிரோதமாக விரிவுபடுத்துவதாகக் குற்றம் எக்ஸ் சாட்டியுள்ளது.

மார்ச் 5, 2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, பேச்சு சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட சட்டப் பாதுகாப்புகளைத் தவிர்த்து, உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான ஒரு இணையான அமைப்பை புது டில்லி உருவாக்கியுள்ளது என்று குற்றம் சாட்டுகிறது.

பில்லியனர் தனது ஏனைய உயர் மட்ட முயற்சிகளான ஸ்டார்லிங்க் மற்றும் டெஸ்லாவை இந்தியாவில் தொடங்கத் தயாராகி வருவதாகக் கூறப்படும் நிலையில், இந்த சட்டப் போராட்டம் ஒரு முக்கியமான நேரத்தில் வருகிறது.

கடந்த ஆண்டு உள்துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட உள்ளடக்கத்தைத் தடுக்கும் வலைத்தளத்தைப் பயன்படுத்த இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்ற அரசுத் துறைகளை ஊக்குவிப்பதாக எக்ஸின் வழக்கு கூறுகிறது.

முறைப்பாட்டின் படி, இந்திய சட்டத்தின் கீழ் பாரம்பரியமாக தேவைப்படும் கடுமையான பாதுகாப்புகள் இல்லாமல் எண்ணற்ற அரசு அதிகாரிகள் உள்ளடக்கத்தை அகற்ற உத்தரவுகளை பிறப்பிக்க இந்த வலைத்தளம் உதவுகிறது.

எவ்வாறெனினும் மஸ்க்கின் பிற முயற்சிகளுக்குத் தேவையான அனுமதிகள் மற்றும் உரிமங்களை அங்கீகரிக்க அரசாங்கத்தின் விருப்பத்தை இந்த சர்ச்சை பாதிக்கலாம் என்று சில ஆய்வாளர்கள் ஊகிக்கின்றனர்.

கர்நாடக மேல் நீதிமன்றம் இந்த வார தொடக்கத்தில் இந்த வழக்கை சுருக்கமாக விசாரித்தது. ஆனால் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

மார்ச் 27 அன்று நீதிமன்றம் தொடர்ந்து வாதங்களை விசாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.





# காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் 200 குழந்தைகள் உட்பட 591 பேர் உயிரிழப்பு

தெற்கு காஸா பகுதியில் தரைவழி தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் காஸா பகுதியில் மேற்கொண்ட தாக்குதல்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 200 குழந்தைகள் உள்ளிட்ட 591 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி தாக்குதலில் ஆயிரத்து 42 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.









# பூமியை விட ஐந்து மடங்கு பெரிய புதிய கிரகம் கொட்டிக் கிடக்கும் வைரங்களுடன் அவதானிப்பு

நாசாவின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியானது புதிய கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது.

இந்த புதிய கிரகம் பூமியை விட 5 மடங்கு பெரியது என நாசா தெரிவித்துள்ளது.

பூமியிலிருந்து 41 ஒளி ஆண்டுகள் தொலைவில் இந்த கிரகத்தை நாசா கண்டுபிடித்துள்ளது.

முக்கியமாக, புதிய கிரகத்தில் கணிசமான அளவு வைரங்கள் இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். கிரகத்தின் நிறை, மூன்றில் ஒரு பங்கு வைரங்களால் ஆனது என்று ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

இந்த கிரகத்தில் வைரம் போன்ற கார்பன் சார்ந்த கட்டுமானங்கள் இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

பக்கம் 04
கனடா முரசு
வெள்ளிக்கிழமை 21/03/2025

## கனடாவின் மக்கள் தொகை 41.5 மில்லியனாக உயர்வு

கனடாவின் மொத்த மக்கள் தொகை 2025 ஜனவரி 1 நிலவரப்படி 41,528,680 ஆக உயர்ந்துள்ளது என கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

04



# ஏப்ரல் 28 இல் கனடாவின் பொதுத் தேர்தல் மார்ச் 23 இல் நாடாளுமன்றம் கலைப்பு

**கனடாவின் பொதுத் தேர்தல் ஏப்ரல் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கமைய மார்ச் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 343 புதிய தொகுதிகள் உள்ளன.**

முக்கிய அரசியல் நிலவரங்கள்:

அமெரிக்கா விதித்த வரிகள் மற்றும் ட்ரம்ப்பின் அத்துமீறல் போக்கை எதிர்த்து கனடியர்கள் நாட்டுப்பற்றுடன் லிபரல் கட்சியை ஆதரிக்கிறார்கள்.

சமீபத்திய கருத்துக்கணிப்புகளில் 4 வீதமானோர் புதிய பிரதமர் மார்க் கார்னியை ஆதரிக்கிறார்கள்.

கன்சர்வேடிவ் கட்சியினர்(பியர் போய்லிவ்ரே)

வரி குறைப்பு, பொருளாதார வளர்ச்சி, குடியேற்றக் கொள்கையில் மாற்றங்கள் போன்ற விஷயங்களை முன்வைக்கின்றனர். தற்போது இரண்டாம் இடத்தில் உள்ளனர்.

என்.டி.பி. (ஜக்மீத் சிங்)

இலவச மருத்துவம், வீட்டு 03



# கனேடியர்கள் நால்வருக்கு சீனாவில் மரண தண்டனை

கனேடிய பிரஜைகள் நால்வருக்கு சீனாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் மெலனி ஜோலி கூறியுள்ளார்.

போதைப்பொருள், உளவு மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளில் கைதாகும் நபர்களுக்கு சீனாவில் மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

இது குறித்த உரிய தகவல்களை அந்த நாடு வெளியிடா விட்டாலும், உலகில் மரண தண்டனை நிறைவேற்றப்படும் நாடுகளில் சீனாவும் ஒன்று என மனித உரிமை அமைப்புகள் தெரிவித்து உள்ளன.

அதேநேரத்தில் இரட்டை குடியுரிமையையும் சீனா இதுவரை அங்கீகரிக்கவில்லை. வெளிநாட்டி 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் -Bonding Tamils Globally



## திருக்குறள் மீது உறுதிமொழி எடுத்து:

# கனடாவின் துணை அமைச்சராக பதவியேற்றார் விஜய் தணிகாசலம்

கனடாவின் - ஒன்ராறியோ மாநில முதல்வர் டக் ஃபோர்ட்டினால், கனேடிய தமிழர் விஜய் தணிகாசலம் சுகாதார அமைச்சின் உளநலத்துறையின் இணை அமைச் சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

விஜய் தணிகாசலம் மூன்று முறை ஒன்ராறியோ மாநிலத்தின் ஸ்காபரோ - றூஜ் பார்க் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் மூன்று முறை இணை அமைச்சராகவும் பொய்யாமொழிப் புலவரின் உலகப் பொதுமறையாம் 'திருக்குறள்' மீது பதவியேற்பு உறுதி மொழி எடுத்து தனது பதவிகளை ஏற்றிருந்தார்.

புலம்பெயர்ந்த கனடியத் தமிழர்களின் வரலாற்றிலும், தெற்காசியாவிற்கு வெளியேயுள்ள தமிழர்கள் மத்தியிலும் திருக்குறள் மீது தனது பதவியேற்பு உறுதிமொழியை எடுத்துக்கொண்ட ஒரே அரசியல்வாதியாக விஜய் தணி காசலம் மட்டுமே விளங்குகிறார் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இவர், 2018 ஆம் ஆண்டு ஸ்காபரோ றூஜ் பார்க்கின் முதலாவது தமிழ், மாநில சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவாகி வரலாறு படைத்தார்.

அத்துடன், மீண்டும் 2022ஆம் ஆண்டு பெருவாரியான மக்களின் ஆதரவுடன் அதே பகுதிக்கான சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2023 இல் போக்குவரத்துத் துறைக்கான இணை அமைச்சராகப் பதவி உயர்த்தப்பட்ட இவர், 202 4இல் வீட்டுவசதித்துறைக்கான இணை அமைச்சராகப் பதவி யேற்று, இன்று சுகாதார அமைச்சின் உளநலத்துறையின் இணை அமைச்சராக சமூகத்துக்கான தனது அர்ப்பணிப் புடனான பணியைத் தொடங்குகிறார்.

தனது சமூகத்தின் மீதான அசைக்க முடியாத நம் பிக்கை, தமிழர் பாரம்பரியத்தின் மீதுள்ள பெருமிதம் ஆகியவையே அமைச்சர் விஜய் தணிகாசலத்தின் தலை மைத்துவப் பண்பை வரையறுக்கும் கூறுகளாகும்.

இவர் 2021 ஆம் ஆண்டில், இலங்கையில் தமிழ் மக்களுக்கு நேர்ந்தது இனவழிப்பு எனவும் அதை புலம்பெயர்ந்த தமிழர்களும் ஒன்ராறியோ வாழ் மக்களும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தி விழிப்புணர்வு அளிக்கவும், நிரந்தர தீர்வைப் பெறவும், தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டத்தினைக் கொண்டு வந்தார்.

ஒன்ராறியோ மாநிலம் இலங்கையில் தமிழின அழிப்பு நடைபெற்றதென்பதை அங்கீகரித்த புலம்பெயர் தேசங்களில் முதல் பிராந்தியமாக விளங்குகிறது.

இது தமிழ் மக்களுக்கு ஒரு வரலாற்றுத் தருணமாகும். மேலும், நவீன வசதிகளுடனான தமிழ் சமூக மையத்துக் கான முன்னெடுப்பையும் அதற்கு ஆதரவளிப்பதற்காக ஏறத்தாழ 12 மில்லியன் நிதியைப் பெறுதல் போன்ற முயற்சிகளிலும் தமிழ் சமூகத்துக்கான இவரது பங்களிப்பு அளப்பரியது.

தனது தொகுதிக்குள்ளும் அதற்கு வெளியேயும் ஒன்



ராறியோ மக்களுக்கான சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான இவரது சிறந்த செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

தனது சமூகத்திற்கும், ஒன்ராறியோ மாநிலத்தின் நலனுக்கும் அயராது பாடுபடும் விஜய் , ஸ்காபரோ நிலக்கீழ் தொடரிவழித்தட விரிவாக்கம், அப்பகுதியில் முதலாவது மருத்துவப் பள்ளியை நிறுவியமை, ஸ்காபரோ சுகாதாரக் கட்டமைப்பின் மீள்மேம்பாடு போன்ற பல மாற்றங்களைத் தனது பிரதேசத்தில் கொண்டுவந்ததில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

அத்துடன், 2023ஆம் ஆண்டில் பொதுப் போக்குவரத்துத் துறையில் கொண்டு வரப்பட்ட 'ஒற்றைக் கட்டணத்' திட்டத்தைத் தொடக்கி வைத்ததன் மூலம், பயணச் செலவினைக் குறைத்து, பயணிகள் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 1600 டொலர்களைச் சேமிப்பதற்கான வழியி னையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

கடந்த ஆண்டு இவர் வீட்டு வசதித்துறைக்கான இணை அமைச்சராகப் பதவி வகித்தபோது மாநிலத் துக்கான குடியிருப்பு வசதிகளில் தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்ட வீடுகள் உட்பட்ட புதுமைமிகு முறையில் குடியிருப்பு நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கான முயற் சிகளை முன்னகர்த்தியிருந்தார் என்று தெரிவிக் கப்படுகின்றது.

14 வயதில் கனடாவிற்கு புலம்பெயர்ந்த ஓர் ஈழத்தமிழ் மகன் இன்று கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்தில் அமைச்சராகப் பதவி வகிப்பதுடன் தமிழ் சமூகத்தின் அடையாளமாகவும் ஒன்ராறியோ மக்களினது குரலாகவும் கடமையாற்றுகின்றார்.

அனைத்திலும் புதுமையைப் புகுத்தல், சேவை மனப்பான்மை, அவற்றுக்கான தளராத நிலைப்பாடு ஆகியவற்றின் மூலம் அமைச்சர் விஜய் தணிகாசலம் தனது சமூகத்திலும் ஒன்ராறியோ மாநிலமெங்கும் நிலைத்த மாற்றத்தினை ஏற்படுத்துவதிலும் உறுதி யாகவுள்ளார். இவரது தலைமைத்துவப் பண்பு அனைவரையும் ஈர்ப்பதுடன், ஏனையோருக்கும் ஓர் உந்துவிசையாக விளங்குகிறது.



## ஏப்ரல் 28 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாடகை கட்டுப்பாடு, வேலை வாய்ப்புகள் ஆகியவை முக்கிய கோரிக்கைகள்.

சில முக்கிய தொகுதிகளில் போட்டியை விறுவிறுப்பாக்குவார்கள்.

பிளாக் கியூபெக்கா
(யூவான் புல்லின்)

கியூபெக் மாகாணத்தின் உரிமைகள் மற்றும் சுயாட்சி தொடர்பான பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துவர்.

பீப்பிள்ஸ் பார்டி ஆஃப் கனடா (மக்ஸிம் பெர்னியர்)

கடுமையான குடியேற்ற எதிர்ப்பு கொள்கைகளுடன் சிறிய அளவில் ஆதரவு உள்ளது.

தற்போதைய நிலையில், அமெரிக்கா கனடாவுக்கு அதிக வரிகள் விதிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் கனடாவின் பொருளாதாரம் பெரிய தாக்கம் அடையும் நிலை உள்ளது. ட்ரம்ப்பின் கனடாவை அமெரிக்காவில் இணைப்பது போன்ற பேச்சுகள் கனடியர்களில் எச்சரிக்கையை உருவாக்கியுள்ளது.

இந்த நிலையில், தேர்தல் முடிவுகள் அமெரிக்காவுடன் கனடாவின் உறவை எப்படி உருவாக்கும் என்பது கவனிக்க வேண்டிய அம்சமாகும். லிபரல் மற்றும் கன்சர்வேடிவ் கட்சிகள் அமெரிக்க பொருளாதார அழுத்தங்களுக்கு எதிராக வலுவான நடவடிக்கைகளை அறிவிக்க வேண்டும்.

இதேவேளை, 2021 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதிகள் மாற்றப்பட்டுள்ளன.

அத்துடன், மேட்டா (Meta) நிறுவனம், பொய்யான AI-generated படங்கள், வீடியோக்கள் மற்றும் குரல் பதிவுகளை பயன்படுத்தும் அரசியல் விளம்பரங்கள் குறித்து கண்டுபிடித்து எச்சரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

சமூக ஊடகங்களில் தவறான தகவல்கள் பரவாமல் இருக்க புதிய கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்படுகின்றன.

---






## கனேடியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னருக்கு சீனாவில் மரண தண்டனை நிறை வேற்றப்படு வது என்பது அரிதான ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில், போதைப்பொருள் பிரச்சினையில் இந்த ஆண்டு கைதான கனடாவை சேர்ந்த நான்கு பேருக்கு சீனா மரண தண்டனை நிறைவேற்றி உள்ளதாக கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் மெலனி ஜோலி கூறியுள்ளார்.

மரண தண்டனையை தடுக்க முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியதாகவும் தெரிவித்தார்.

இதேநேரம் பொறுப்பற்ற கருத்துகள் கூறுவதை கனடா நிறுத்த வேண்டும் எனவும் சட்டப்படியே தாம் செயற்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. தமது இறையாண்மையை கனடா மதிக்க வேண்டும் எனவும் சீனா வலியுறுத்தியுள்ளது.

உலகின் பிற பகுதிகளை விட சீனா ஒவ்வொரு ஆண்டும் அதிகமான கைதிகளை தூக்கிலிடுவதாக நம்பப்படுகிறது. ஆனால் அந்த எண்ணிக்கை வெளியே கசியாத வகையில் அர சாங்கத்தால் இரகசியம் காக்கப்படுகிறது.

சீனாவில் பொதுவாக மரணதண்டனைகள் துப்பாக்கிச் சூடு மூலம் நிறைவேற்றப்படுகின்றன, இருப்பினும் சமீபத்திய ஆண்டுகளில் விஷ ஊசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, கனேடிய ஊடகங்கள் வெளியிட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், போதைப்பொருள் குற்றங்களுக்காக சுமார் 100 கனேடியர்கள் தற்போதும் சீனாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றே தெரிய வந்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கடந்த வியாழக்கிழமை தெரிவிக்கையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் எந்த நாட்டினராக இருந்தாலும் சீனா சமமாக நடத்துகிறது, அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், அவர்களின் வழக்குகளை நியாயமாகவும் கண்டிப்பாகவும் கையாளுகிறது என்றார்.

இதனிடையே, மரண தண்ட னைக்கு எதிரான உலக கூட்டணி அமைப்பு கடந்த 2022 இல் வெளியிட் டுள்ள தரவுகளில், 2007 முதல் சீனா வில் ஆண்டுக்கு குறைந்தது 8,000 பேர் தூக்கிலிடப்பட்டனர் என கூறி யுள்ளது.



# கனடாவில் ஓய்வு வயதை 67 ஆக உயர்த்த வேண்டும்

## புதிய அறிக்கை பரிந்துரை

டொரொண்டோவை தலைமையகமாகக் கொண்ட சி.டி. ஹோவ் ஆய்வு நிறுவனம் வெளியிட்ட புதிய அறிக்கையில், தொழிலாளர் பற்றாக் குறையை சரிசெய்யவும், ஓய்வூதிய அமைப்புகளை நிலைத்திருக்க செய்வதற்கும் கனடா தங்களின் சாதாரண ஓய்வு வயதை 67 ஆக உயர்த்த வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது.

இது உலகின் பல்வேறு வெற்றிகரமான ஓய்வு நிர்வாக முறைமைகளுடன் ஒத்துப் போவதாகவும், கால நிலை மாற்றம், வாழ்நாள் அதிகரிப்பு போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு நெருங்கிய எதிர்காலத்திற்கு நிதியியல் திட்டமிடல் அவசியம் என்றும் சி.டி. ஹோவ் ஆய்வு நிறுவனத்தின் ஆய்வு நிபுணர் பரிசா மஹ்பூபி தெரிவித்தார்.

கனடாவில் கடந்த 10 ஆண்டுகளில் மனிதர்களின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. எனவே, ஓய்வுபின் நீண்ட கால நிதி ஆதரவை பெற்றிருக்க மக்கள் திட்டமிட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் ஓய்வு வயதை தள்ளி வைக்கும் எண்ணத்துக்கு ஆதரவாக இல்லை.

ஓய்வு ஊதியத்தை தாமதமாக வழங்க திட்டமிட்டால், உடல்நிலை காரணமாக முன்னதாகவே ஓய்வுக்கு செல்லும் பணியாளர்கள் பாதிக்கப் படக் கூடாது என்று மூத்த குடிமக்கள் பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதி பில் வாங்கார்டென் தெரிவித்துள்ளார்.

கனடாவில், குறிப்பாக கிழக்கு பகுதியில், மூத்த குடிமக்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ளன.



## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்று மாதங்களில் (ஒக்டோபர் 1, 2024 முதல் ஜனவரி 1, 2025 வரை) மக்கள் தொகை 63,382 அதிகரித்துள்ளது.

வளர்ச்சி வீதம் 0.2 வீதமாக உள்ளது, இது 2020 ஆம் ஆண்டில் கொரோனா-related பயணக் கட்டுப்பாடுகளுக்கு பின்னர் மிகக் குறைந்த வளர்ச்சியாகும்.

2023 மூன்றாம் காலாண்டி, மக்கள் தொகை மிக வேகமாக அதிகரித்துள்ளது.

இப்போது, வளர்ச்சி வீதம் மந்தமடைந்து வருகின்றது என தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த மூன்றாண்டுகளில் பணி நிலை குடியேறிகள் (Non-Permanent Residents - NPR) தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில், இப்போது முதல் முறையாக குறைந்துள்ளது.

2024 ஒக்டோபர் 1க்கு ஒப்பிடும்போது, 2025 ஜனவரி 1 க்குள் 28,341 பணிநிலை குடியேறிகள் குறைந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் மொத்தம் 744,324 பேர் கனடாவில் குடியேறியுள்ளனர்.